මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/08/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025.03.22

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல. : 01/2025**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் / பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு / நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டில் பொதுச் செலவினங்களைச் செய்வதற்கும் நிர்வகிப்பதற்கும் அங்கீகாரம் வழங்குதல்**

**01. செலவினங்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளித்தல்**

2025 ஆம் ஆண்டுக்கான செலவினங்களைச் செய்ய அதிகாரமளிக்கும் 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2025.03.21 அன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

2025 ஆம் ஆண்டுக்கான அரசாங்க செலவினங்களைச் செய்யும் நோக்கத்திற்காக திரட்டு நிதியிலிருந்து பணத்தை எடுப்பதற்கு அதிகாரமளிக்கும் தொடர்புடைய ஆணைப் பத்திரங்களில் நிதி அமைச்சர் கையெழுத்திட்டுள்ளார்.

அதன்படி, 2025 ஆம் ஆண்டில் பணம் செலுத்தும் வவுச்சர்கள் மற்றும் பிற ஆவணங்களில் தொடர்புடைய அதிகாரம் பின்வருமாறு குறிப்பிடப்படல் வேண்டும்;

அ) பொது அரச சேவைகள் - 2025 இன் 1 ஆம் இலக்க சாதாரண ஆணைப்பத்திரம்
ஆ) விஷேட சட்ட சேவைகள் - 2025 இன் 1 ஆம் இலக்க விசேட சட்ட ஆணைப்பத்திரம்
இ) முற்பண செயற்பாடுகள் - 2025 இன் 1 ஆம் இலக்க முற்பண ஆணைப்பத்திரம்

**02. பொதுச் செலவினம் மீதான முகாமைத்துவப் பொறுப்பு**

அனைத்து பிரதான கணக்கீட்டு அலுவலர்களும், தங்கள் நோக்கெல்லைக்கு உட்பட்ட நிறுவனங்களின் நிதி நிர்வாகத்தின் போதுமான தன்மையை உறுதி செய்வதற்காக நிதி அமைச்சருக்குப் பொறுப்புக்கூற வேண்டும். மேலும், குறித்த வருடத்தின் போது வரவு செலவுத் திட்ட இலக்குகள் மற்றும் முடிவுகள் அடையப்படுவதை உறுதி செய்வது பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள் அதேபோன்று விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களின் பொறுப்பாகும். குறிப்பாக மூலதன அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கிரமமான இற்றைப்படுத்தல் மற்றும் உடனடி திருத்த நடவடிக்கைகள் மூலம் வருடாந்த இலக்குகள் அடையப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இருப்பினும், வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் இல்லாமல் செய்யப்படும் உறுதிமொழிகளுக்கு திறைசேரி பொறுப்பல்ல என்பதால், அத்தகைய செலவினங்களுக்கு தொடர்புடைய அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார்கள்.

**03. 2025 ஆம் ஆண்டில் பொதுச் செலவின முகாமைத்துவம்**

03.1 பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விதிகளை விரிவாகக் கோடிட்டுக் காட்டும் தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 01/2024 இல் கொடுக்கப்பட்டுள்ள செலவினக் கட்டுப்பாடு குறித்த வழிமுறைகள் மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள பிற சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அறிவுருத்தல்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

03.2 2025 ஆம் ஆண்டுக்கான பொறுப்புகளில் நுழைவதற்கு முன்னர், ரூபா 500 மில்லியனுக்கும் அதிகமான மூலதனச் செலவினங்கள் அல்லது ரூபா 1000 மில்லியனுக்கும் அதிகமான மொத்தச் செலவினம் தொடர்பாக, பல ஆண்டுகளில் செலுத்த வேண்டிய பொறுப்புகளை நிர்வகிப்பதற்கு, திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெறுதல் வேண்டும்.

03.3 மிகவும் அத்தியாவசியமான நோக்கத்திற்காக மேலதிக ஒதுக்கீட்டிற்கான கோரிக்கைகள் செய்யப்பட்டால், அத்தகைய கோரிக்கைகள் எல்லா நேரங்களிலும் பிரதான கணக்கீட்டு அலுவலரின் பரிந்துரையுடன் பொது திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டும். இருப்பினும், மேலதிக ஒதுக்கீட்டிற்கான கோரிக்கைகள் 2025 இன் அச்சிடப்பட்ட விரிவான மதிப்பீடுகளின் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் / நோக்கங்களுடன் மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

03.4 வகைமாற்றல் நடைமுறையின் (Virement procedure) கீழ் ஒதுக்கீடுகளை மாற்றுவதற்கான கோரிக்கைகள் செய்யப்படும் சந்தர்ப்பங்களில், ஒதுக்கீடுகளின் பற்றாக்குறை மற்றும் மிகை உருவாவதற்கான காரணங்கள் போதுமானதாகவும் தெளிவாகவும் குறிப்பிடப்படல் வேண்டும். அத்தகைய கோரிக்கைகள் 2025.12.31 இற்கு முன்னர் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

03.5 மேலும், 2025.12.31 க்குப் பிறகு, நிதி ஒழுங்குமுறை 69 இன் கீழுள்ள ஏற்பாடுகளை மாற்றுதல், ஏற்கனவே செய்யப்பட்ட ஏற்பாடுகளை விட அதிகமாக பணம் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்றும், நிதி ஒழுங்குமுறை 69 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி முன் அங்கீகாரத்தைப் பெறாமைக்கு போதுமான காரணங்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால், அத்தகைய மாற்றல்கள் அங்கீகரிக்கப்படாது என்றும் வலியுறுத்தப்படுகிறது.

03.6 தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பிற அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் மூலம் தங்கள் எல்லைக்குள் செயற்பாடுகளைச் செய்யும் சந்தர்ப்பங்களில், செயற்பாட்டை முடிக்க போதுமான நேரத்தை அனுமதிக்கும் வகையில், தொடர்புடைய நிதியாண்டின் கடைசி காலாண்டிற்கு முன்னர் நிதி ஒழுங்குமுறை 208 இன் கீழ் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் வழங்கப்படல் வேண்டும்.

03.7 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 53 இன் படி, சட்டரீதியான அமைப்புகளால் மூலதனச் செலவினங்களைச் செய்வதற்கு நிதி அமைச்சரின் ஒப்புதலுக்கான கோரிக்கைகள் 2025.04.07 ஆந் திகதிக்கு முன்னர் சட்டரீதியான சபைகளின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் மூலதனச்

செலவினங்களை வழங்குவதற்கான விதிமுறைகள் உருவாக்கப்படும் வரை பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**04. 2025 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துதல்**

04.1 2025 வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் செலவின முன்மொழிவுகள், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பொதுமக்களுக்கு விரும்பிய முடிவுகளை வழங்குவதை உறுதி செய்வது அவசியமாகும். இதற்காக, தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2019.01.10 ஆந் திகதிய MNPEA/02/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்ட சமர்ப்பிப்பு படிவத்தின்படி, தொடர்புடைய கருத்திட்ட முன்மொழிவுகள் முதலில் தயாரிக்கப்பட்டு, அந்த திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் தேவையான ஒப்புதலை உடனடியாகப் பெற வேண்டும்.

04.2 கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலான ஒரு குழு, செலவின முன்மொழிவுகளை செயற்படுத்துவதை கண்காணித்து, முன்னேற்ற மதிப்பாய்வுகள், பின்தொடர்தல்கள் மற்றும் ஒருங்கிணைப்புகளை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செலவின முன்மொழிவுகளை செயல்படுத்துவதன் முன்னேற்றம் மாதந்தோறும் மதிப்பாய்வு செய்யப்படும், மேலும் இது தொடர்பான தேவையான தகவல்கள், துறையால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04.3 அரசாங்க துறையில் சம்பள உயர்வுகள், ஓய்வூதிய திருத்தங்கள் மற்றும் பொது அதிகாரிகளுக்கான இடர் கடன் வரையறையினை அதிகரிப்பது தொடர்பான வரவு செலவித்திட்ட திட்டங்களை செயற்படுத்துவதற்கான தொடர்புடைய சுற்றறிக்கைகள் / வழிகாட்டுதல்கள் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் உரிய நேரத்தில் வெளியிடப்படும்.

04.4 2025 ஆம் ஆண்டிற்கான "முற்பணக் கணக்குகளுக்கான" அதிகபட்ச செலவின வரையறைகள், இடர் கடன் உரிமை வரையறையில் முன்மொழியப்பட்ட அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட்டுள்ளன. மேலும் ஒதுக்கீட்டுச் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச செலவின வரையறைகளை மேலும் அதிகரிப்பதற்கான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படாது. எனவே, நிறுவனங்கள் ஆண்டு முழுவதும் இருக்கும் வரையறைகளுக்குள் கடன்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்ய பொருத்தமான முன்னுரிமை கட்டமைப்பை நிறுவுதல் வேண்டும்.

**05. வாக்குப் பதிவுக் கணக்கினை ஒழித்தல் மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டத்தை அமுல்படுத்துதல்**

2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமானது, 2024.12.06 அன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாக்குப் பதிவுக் கணக்கின் ஊடாக ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழும் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2025 முழு நிதியாண்டிலும் வரவு செலவுத்திட்ட நிறுவனங்களால் செய்யப்பட்ட செலவினம் இந்தச் சட்டத்தின் நிதி ஏற்பாடுகளுடன் ஒத்துப்போக வேண்டும்.

அதன்படி, முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் மற்றும் மேலதிக ஒதுக்கீடுகளின் கீழ் உள்ள செலவினங்கள் உட்பட, 2025.01.01 முதல் தற்போது வரை வாக்குப் பதிவுக் கணக்கின் கீழ் செய்யப்பட்ட அனைத்து செலவினங்களும், 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட செலவினங்களாகக் கருதப்படல் வேண்டும்.

மேலும், அதிகார இலக்கங்கள் 01/2025 முதல் 21/2025 வரை வழங்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடுகள், 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 06 (1) இன் கீழ் வழங்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடுகளாகக் கருதப்படும். 2025 ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது சில மேலதிக ஒதுக்கீடுகளைச் சேர்த்து வருடாந்த செலவின வரையறைகள் தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களமானது முன்னர் வெளியிடப்பட்ட மேலதிக ஒதுக்கீட்டு கடிதங்களை இரத்துச் செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில், மேலதிக ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி ஏற்படும் செலவுகள், 2025 வருடாந்த மதிப்பீடுகளில் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுடன் ஏற்பட்ட செலவினமாகக் கருதப்படும்.

மேலும், 2024.12.06 அன்று அங்கீகரிக்கப்பட்ட வாக்குப் பதிவிவுக் கணக்கின் மூலம் செய்யப்பட்ட மீதமுள்ள எந்தவொரு ஏற்பாடும் இனி செல்லுபடியாகாது.

**06. தெளிவுபடுத்தல்கள்**

இந்த சுற்றறிக்கை தொடர்பான ஏதேனும் தெளிவுகளுக்கு, பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி உங்கள் அமைச்சு / திணைக்களம்/ நிறுவனத்திற்கு பொறுப்பான தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் தொடர்புடைய அலுவலர் அல்லது மேலதிக பணிப்பாளர் நாயகத்தை (0112-484681) தொடர்பு கொண்டு பெறலாம்.

**ஒப்பம்/**
**கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு